# முகிழ்

யுத்தம் என
எழுதும் பேனாவிலும்
கசிகிறது குருதி.....

ட. சுகன்ஜா
2013 கலைப்பிரிவு

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி 2012 இதழ் – 03



## எங்கள் அன்னை

இரவிலும் பறக்கும்
ஈரப்பறவையாய்
இறகுலர்த்த நேரமின்றி
இயங்குகிறாள் எம் அன்னை

## அதிபரின் வாழ்த்துச்செய்தி



மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் பல்வேறு பட்ட திறன்களை வெளிக்கொணர்வதற்கு பலவிதமான செயற்பாடுகள் கல்லூரியில் இடம் பெறுகின்றன. இந்த வகையில் முன்னாள் அதிபர் திரு வ.ஸ்ரீகாந்தன் அவர்களின் காலத்தில் ஆரம்பிக்கப் பட்ட முகிழ் இதழானது மீண்டும் துளிர் விடுகின்றது. மாணவர்களின் ஆக்கங்களை வெளிக்கொணர் வதையும், பாடசாலை பற்றிய தகவல்களை ஆவணப்படுத்துவதையும் முக்கியமான நோக்கமாகக் கொண்டு முகிழ் வெளிவருகின்றது. இத்தகு செயற்பாடுகள் ஊடாக மாணவர்கள் பல்துறை ஆற்றல் கொண்டவர்களாக உருவாக முடியும் என நினைக்கின்றேன். அந்த வகையில் இந்த இதழ் மீண்டும் வெளிவருவதையிட்டு வரவேற்கின்றேன். இச் சஞ்சிகை வெளிவர பாடுபடும் எமது தமிழ்த்துறை ஆசான் திரு.ந.குகபரன் அவர்களை பாராட்டுகின்றேன்.

## வெற்றி பயணத்தில் நாம் பெற்ற அனுபவம்

1929ம் ஆண்டு விதை விதைக்கப்பட்டு இன்று பெருவிருட்சமாய் ஓங்கி வளர்ந்து சகல துறைகளிலும் கிளை விட்டு பரப்பி வளர்ந்து கொண்டிருக்கும் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் சாதனைப்பயணத்தில் விளையாட்டுத் துறையும் ஒரு முக்கிய இடம் வகித்து வருகின்றது. வலைப்பந்தாட்டம் என்பது இறைவன் சண்டிலிப்பாய் இந்து தாய்க்கு அளித்த ஒரு கொடை ஆகும். இவ் வலைப் பந்தாட்டம் அன்று தொட்டு இன்று வரை சரவெடியான சாதனைகளை நிலை நிறுத்தி வருகின்றது.

1994ம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் வலைப் பந்தாட்டம் மிகவும் சிறப்பாக சண்டிலிப்பாய் இந்துவில் தடம் பதித்துள்ளது. இங்கு 15, 17, 19 வயதுப்பிரிவு அணிகள் சிறப்பாக திகழ்கின்றன. இவ் வலைப்பந்தாட்ட மானது கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என பல இடங்களில் தனது பெயரை நிலை நாட்டி வருகின்றது. இது மட்டுமல்ல 2007ம்ஆண்டு இரண்டு வீரர்கள் தாயக அணியில் பங்குபற்றினர். இவ்வாறு இவ் வலைப்பந்தாட்ட சாதனைகள் இன்னும் பல.

2008ம் ஆண்டு நாங்கள் 15 வயதுப்பிரிவில் முதன்முதலாக மாகாணம் சென்றோம். எங்களுடன் 19 வயதுப்பிரினரும் சேர்ந்து வந்தனர். நாட்டுச் சூழ்நிலை மோசமான நிலையாக காணப்பட்டாலும் எமது வெற்றிப்பயணம் இடை நிறுத்தப்படவில்லை. நாம் போக்குவரத்திற்கு கூட எவ்வளவோ சிரமப்பட்டு கடல் வழி மூலமாகவும் தரை வழி மூலமாகவும் சென்று இவ் விளையாட்டை விளையாடி வெற்றிப்பயணத்தை தொடர்ந்தோம். நாங்கள் மாகாணமட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்திற்கு கால் பதித்தோம். 19 வயதுப்பிரிவினர் மாகாணமட்டத்தில் நிலைபெற்று சண்டிலிப்பாய் இந்துவின் சாதனைப்பட்டியலில் இடம் பிடித்தனர். இந்த வெற்றிப் பாதைக்கு நாங்கள் மட்டுமல்ல எமது ஆசிரியர்கள் பெற்றோர்கள் போன்றவர்களின் ஒத்துழைப்பு அளப்பெரியது.வலைப்பந்தாட்ட அணியினரது விடா முயற்சியும் இந்த வெற்றியை ஈட்ட வழி வகுத்தது. தேசிய மட்டத்தில் பங்குபற்றி நாம் எமது விளையாட்டின் திறமைகளை காட்ட முடிந்ததுடன் ஒரு அனுபவத்தையும் பெற முடிந்தது.

2010ம்ஆண்டு எங்களது பாடசாலையில் இருந்து கோட்டம், வலயம், மாவட்டம் என்ற நிலைக்கு 3

6ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகிழ்
இதழ்
Tel : 021 2240080, 021 3216462
E.mail : sanhindu@gmail.com

ஆலோசனை : **திரு. கு. வீமலன்**
(முதல்வர்)
**திரு. ஆனந்தநடராசா**
(பிரதி அதிபர்)

இதழாசிரியர் : **திரு. ந. குகபரன்**

*நீண்ட இடைவெளிக்குப் பின் முகிழின் வருகை நிகழ்கிறது.மாணவர் தம் எழுத்தாக்கத் திறன்களை வளர்க்கும் களமாகவும் கல்லூரி நிலைசார் செயற்பாடுகளைப் பதிவாக்கும் ஆவணமாகவும் முகிழ் மலர்கிறது. எம் மத்தியில் படிப்பார்வமும் படைப்புந்தலும் குறுகி, பொழுதுபோக்கு வழிகள் பண்புசார் பிறழ்வுகளைத் தூண்டும் தன்மையனவாக மாறி வரும் இன்றைய காலத்தில் மனிதத்தை மதிக்கும் மாண்புடையவர்களாக எம்மைத் தகவமைத்துக் கொள்வதற்கு ஒழுங்கு படுத்தப்பட்ட பொறி முறை அவசியம். இதற்கு குடும்பம், சமூகம், சட்டம் என அனைத்து நிலையிலும் அர்ப்பணிப்புடனான ஒருங்கிணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டு மரபுசார் விழுமியங்கள் பற்றிய புரிதலை சமூகத்தவர் மத்தியில் ஏற்படுத்துவதற்கு சமூக அக்கறை உள்ள அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டியது காலத்தின் கட்டாய மாகும். சமூகத்தில் பரவியுள்ள பிறழ்வு நோயை மாற்றும் மருந்து எம் மத்தியிலேயே உள்ளது. சவால்கள் பலவற்றை சந்தித்த நாம் இன்றைய சமூக அவலத்தையும் வெற்றிகொள்ள ஒற்றுமை யுடன் ஒன்றுபடுவதே ஒரே வழியாகும்.*

## இரட்டைக்காப்பியம்

தன்னிகரில்லாத் தலைவனுடைய வாழ்க்கை வரலாற்றை அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற் பொருளும் முழுமை அடைய அமைத்து நாடு நகர முதலான இயற்கை வர்ணணைகளோடு இணைத்துப் பாடப்படும் பேரிலக்கிய வடிவத்தைக் காப்பியம் என்று பொதுவாக அழைப்பர். சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன காவியங்களிற் குரிய பண்புகளைக் கொண்டிருப்பதால் இவ் இரண்டையும் சேர்த்து இரட்டை காப்பியம் என்று கூறுவர்.



சிலப்பதிகாரமானது தமிழில் தோன்றிய முதல் காப்பியம்; முத்தமிழ் காப்பியம். இவ் இலக்கியம் இளங்கோ அடிகளால் படைக்கப்பட்டுள்ளது. புகார்க்காண்டம், வஞ்சிக்காண்டம், மதுரைக்காண்டம் என்னும் மூன்று காண்டங்களையும் முப்பது காதை களையும் ஐந்நூறு அடிகளையும் கொண்டு உருப்பெற்றது. சமண சமயத்தைத் தழுவி அமைந்த இவ் இலக்கியம் தன்னிகரில்லாத தலைவனான கோவலனையும் கண்ணகியையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டமைந்துள்ளது. இவ் இலக்கியத்தின் முக்கிய நோக்கம்

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்....."

எனும் மூன்று பெரும் தத்துவங்களை விளக்குவதே ஆகும். அத்துடன் அகவல்பா யாப்பில் பாடப்பட்ட நெடுங் கதை கூறும் இலக்கியமாக அமைந்துள்ளது. இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் பிரதிபலிக்கும் இக் காப்பியம் குடிமக்கள் காப்பியம், பத்தினிக் காப்பியம், புரட்சிக் காப்பியம் எனும் பல பெயர்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இது சாதாரண வணிகர் குலத்தைச் சேர்ந்த கோவலன் கண்ணகியை பாட்டுடைத்தலைவர்களாக கொண்டிருப்பதால் குடிமக்கள் காப்பியமாகவும் பாடல்களின் இடையிடையே உரைநடைத் தன்மை விரவி வந்திருப்பதால் உரை இடையிட்ட பாட்டுடைச் செய்யுள் இலக்கியமாகவும் அமைகின்றது. கண்ணகியை சோழ நாட்டில் பிறக்க வைத்து பாண்டிய நாட்டில் நீதி கேட்க வைத்து சேர நாட்டில் தெய்வமாக்கியதன் மூலம் தமிழகத்தையே ஒற்றுமைப் படுத்திய காப்பியமாகவும் இது அமைகின்றது. அத்துடன் சங்க காலச் சூழலின் தாக்கத்திலிருந்து விடுபடும் நோக்குடன் அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக தனித்துவமான விடயங்களை முன் நிறுத்தி தோற்றம் பெற்றுள்ளது. இவ் இலக்கியத்தினுடைய கதைப் பொருளுக்கு சிலம்பு அதிகாரம் பெற்று ஊடு பொருளாக இருப்பதால் சிலப்பதிகாரம் என்று பெயர் பெற்றதென்பர்.இவ் இலக்கியத்தின் சிறப்புக் கருதி "நெஞ்சை அள்ளும் தமிழ்க்காப்பியம் சிலப்பதிகாரம்" என பாரதியார் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக தமிழ் இலக்கிய வரலாற்றில் பௌத்த சமயக்கருத்துக்களை முன்னிலைப் படுத்தி மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் படைக்கப்பட்டதே மணிமேகலை எனும் இலக்கியம். கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாகப் பிறந்த மணிமேகலையைத் தன்னிகரில்லாத் தலைவியாக அமைத்து பாடப்பட்டுள்ளது. 30 காதைகளையும் 4286 அடிகளையும் கொண்டு அமைந்துள்ளது. அகவல்பா யாப்பில் பாடப்பெற்ற நெடும் கதை கூறும் இலக்கியமாகவும் அமைந்துள்ளது. அறத்தினை பல்வேறு வழிகளில் முதன்மைப்படுத்திய இக் காப்பியம் தமிழில் தோன்றிய முதல் சமய காப்பியம் என்ற பெருமையையும் பெற்றுள்ளது. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற கருத்தினை வலியுறுத்தி "பிறத்தலும் மூத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணிபட்டு இரங்கலும் இறத்தலும் உடையது இடும்பைக் கொற்கலம் மக்கள் யாக்கை" என நிலையாமையை எடுத்துக்காட்டி தனித்துவமான இடத்தை இவ் இலக்கியம் பெற்றுள்ளது. சாத்தனார் உலக நீதிகளைப் பௌத்த சமயத்தின் கொள்கை வழி வெளிப்படுத்தியுள்ளார். மனித வாழ்வில் பல தீமைகளைச் செய்ய அடிப்படையாக இருப்பது பசி. "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்பது பழமொழி. பசியால் ஏற்படும் துன்பங்களை படம் பிடித்து காட்டுகின்றார் நூலாசிரியர். உலகப் பொது உண்மைகள் பலவற்றை உணர்த்துகிறது மணிமேகலை. இயற்கையையும் எழிலுற இயம்புகிறது.

"அறம் எனப்படுவது யாது? எனக் கேட்பின் மறவாது இது கேள்

மன் உயிர்க்கு எல்லாம் உண்டியும் உடையும் உறையுளும்

அல்லது கண்டது இல்"

உலகில் வாழ மேற்கூறப்பட்ட பாடலடியில் கூறப்பட்டதே மனித அறம் என்கிறது மணிமேகலை.

இவ் பேரிலக்கியங்களான சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகியன வாழ்க்கையை தொடர்நிலையாய் சித்தரிக்கும் தன்மை கொண்டனவாய் அமைந்தது என்று கூறினால் மிகையாகாது.

ந.துசாந்தி
A/L 2011கலைப்பிரிவு

# கல்வியின் மேன்மை

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

என்பது ஒல்காப் பெருமை தொல்காப்பியனார் வாக்கு. மனிதனுக்குரிய பெருமித வாழ்க்கையை குறிக்கும் விடயங்களில் கல்வியும் ஒன்றாகும். கல்வியானது நுண்மதியாற்றலையும் திறன்களையும் வளர்க்கின்றது. அத்தோடு வாழ்க்கைக்கு வேண்டிய நற்பண்புகளையும் வளர்க்கின்றது.

கல்வியானது ஆதிகாலம் தொட்டு இன்று வரை எல்லோராலும் போற்றப்பட்டு வருகின்றது. "கல்" என்பதன் வினையடியாக பிறந்தது "கல்வி" என்பர். கல்வி "எடு" அல்லது "தோண்டு" என்ற பொருளைக் கொண்டது. "கல்" எனும் சொல் ஒருவரிடம் மறைந்திருக்கும் ஆற்றலைத் தோண்டி வெளிக் கொணர்கிறது. இது கல்வியின் இலக்காகும். இதன் மூலம் மனிதனுடைய வாழ்க்கை ஒளி பெறுகிறது.

ஒருவரது வாழ்க்கையில் படிப்படியாக மாற்றத்தை ஏற்படுத்தி அவனை சமூகத்தோடு ஒட்டி வாழ வைப்பதும் கல்வியாகும். இத்தகைய கல்வியின் மேன்மை பற்றி தத்துவஞானிகள் தத்தம் கால சூழலுக்கு ஏற்ப கருத்துக்கள் பலவற்றை வெளிப்படுத்தியுள்ளனர். ஆத்மீக ரீதியாகக் கல்வியை நோக்கிய "சுவாமி விவேகானந்தர்" அவர்கள் "மனிதனிடம் ஏற்கனவே பொதிந்திருக்கும் முழுமை பெற்ற நிறைவினை மலரச் செய்வது கல்வியாகும்" எனறார். "காந்தி அடிகள்" "கல்வியானது மக்களது வாழ்க்கையுடன் இணைந்ததாகவும் அதனை உயர்த்துவதாகவும் அமைய வேண்டும்" எனறார். "பண்பாடுள்ள இலட்சிய வாழ்க்கை வாழ்வதற்கு கல்வியே அடிப்படை" என்று தாகூர் விளக்கினார். கல்வியானது குழந்தைகளுக்கு முழுச் சுதந்திரம் என்ற வழியில் அமைய வேண்டும் என்றும் கல்வி ஆன்மீகத் தொடர்புடையது என்றும் கருதினார். அத்துடன் கல்விக் கொள்கைகளில் இசை, ஓவியம், நடனம், ஆகிய நுண்கலைகளின் முக்கியத்துவம் சிறப்பாக அவரால் வலியுறுத்தப்பட்டது. மனித குலத்தின் மேம்பாட்டிற்கான கருவியாகச் செயற்பட வேண்டும் என்றும் தாகூர் கருதினார்.

ஒருவரது நுண்மதியாற்றல்களையும் திறன்களையும் விருத்தி செய்வதோடு மட்டும் நின்று விடாது உலக நோக்கை விரிவடையச்செய்ய வேண்டும். சமூகத்திற்கும் பரந்த உலகத்திற்கும் கல்வியானது பயன்பட வேண்டும். அத்தோடு "உண்மை நன்மை அழகு இம் மூன்றினையும் உணர்த்தும் கல்வியே கல்வி" என்றார் கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ. கல்வியூடாகவே பண்பாடு வளர்க்கப்படுகின்றது. அத்துடன் பண்பாடு பண்டு தொட்டு பராம்பரியமாகப் பேணப்பட்டும் வருகின்றது. "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்றும் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றும் கல்வியை உயர்த்தி மதித்தது தமிழர் பண்பாடு. இம்மை மறுமை ஆகிய இருமைகளிலும் ஏமாப்புடையதாகக் கல்வி கருதப்பட்டது.

கல்வியே வாழ்க்கை, வாழ்க்கையே கல்வி என்று அடிப்படையில் மனித மேம்பாட்டிற்குக் கல்வி முக்கியத்துவம் பெறுகிறது. வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது. மனிதனை வாழ்வாங்கு வாழ வைக்கிறது. சூழலை நன்கறிந்து அதற்கேற்ற விதத்தில் வாழ வழிவகுக்கிறது.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

என பொய்யாமொழிப்புலவர் கூறியுள்ளார். அதாவது ஒருவர் தான் கற்ற கல்வியானது ஏழு பிறப்பிலும் சென்று உதவுகின்றது என்பதாகும்.

சமுதாயத்தில் பண்பாட்டு மரபினை கல்வி இளம் தலைமுறையினருக்கு உணர்த்துகின்றது. புதுக்கருத்துக்கள், புத்தாக்கங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைகிறது. சமுதாயத்தில் பிறருடன் பொருந்தி வாழவைக்கிறது. பயனுள்ள முறையில் ஓய்வு நேரத்தைக் கழிக்கவும் அறிவுப் பெருக்கத்திற்கும் ஒழுக்கவளர்ச்சிக்கும் உதவுகிறது. கல்வி, ஓர் இலக்கினை அடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதனால் முக்கியத்துவம் பெறுகிறது. குறிக்கோளை உணர வைக்கிறது. உணர்ந்த குறிக்கோளை அடையும் வழியை மனிதன் கல்வி மூலம் காண்கின்றான். அவற்றை பகுப்பாய்வு செய்கின்றான். நல்லவற்றை தீயவற்றை உணர்கின்றான்.

கல்வி அறிவு இல்லாதவன் பிரயோசனம் அற்றவன் என்பதினை,

"கண் உடையார் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு புண் உடையார் கல்லாதவர்"

என்றார் வள்ளுவர். எனவே கல்வி அறிவானது முக்கியம் பெறுகிறது. கல்வி தனியாள் ஆளுமையை வளர்ப்பதோடு சமூக வாழ்வையும் வளர்க்கின்றது. தனியாள் சிறப்புற சமூகம் சிறப்புறும். சமூக முன்னேற்றத்தை கல்வி எனும் சாதனமே அளித்து வருகின்றது. எனவே கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தனி மனிதன் தன்னை முன்னேற்றியும் தாம் சார்ந்தோரை முன்னேற்றியும் அத்தோடு சமூகத்தையும் முன்னேறுகின்றான். ''படிக்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்''. எனவே கல்விக்கடல் எனும் அமிர்தத்தை பருகி வாழ்க்கையில் முன்னேறுவோம்.


நி.தர்சினி
A/L 2011
கலைப்பிரிவு

---

# யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்கள் சில..............

இறைவனின் படைப்புக்களில் எத்தனை அதிசயங்கள். அவை இப் பரந்த புவியில் விரிந்து கிடக்கின்றன. அருவி ஆறாகப் பாய்வதும், ஆறு அருவியாய் வீழ்வதும், வான் முட்டும் மலைகளும் இயற்கை அன்னை தந்த வரப்பிரசாதங்கள். இவை கண்களுக்கு இன்பம் தருவன. இவற்றை ஒரே இடத்தில் உடனே எம்மால் பார்க்க முடியாது. அவற்றை சுற்றுலா மேற்கொண்டே பார்க்க முடியும்.

உலகிலே மனிதன் எண்ணற்ற விந்தைகளை தன் அறிவாலும், கலைத் தாகத்தாலும் செய்கிறான். ஆனால் எம்மில் பலர் அவற்றைப் பார்ப்பதே கிடையாது. காரணம் நேரம் இல்லை. அவை மக்களுக்கு புராதன வாழ்க்கை முறைகளையும் பண்பாடு, கலாசாரம் போன்றவற்றையும் எடுத்துக் கூறுகின்றன. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றார் சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார். அவர் காணும் உலகு புதுமையானது. உலக மக்களை ஒற்றுமைப் படுத்தவே அவர் விரும்புகின்றார். அந்த வகையில் மாணவர் களிடையே புரிந்துணர்வு ஏற்படச் சுற்றுலா அவசியம். மாணவர்களின் அறிவை விருத்தி செய்வதற்கு கல்விச் சுற்றுலா கட்டாயமான தொன்று.



அந்த வகையில் எமது மகிழ்வுக்காக ஆசிரியர்கள் எம்மைக் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்றனர். மாணவர்கள் அப்பொன்னாளின் விடியலுக்காக கதிரவனின் புன்னகையை எதிர்பார்த்து இருந்தனர். அந்நாளும் வந்தது. என்றும் இல்லாத மகிழ்வு மாணவர்களிடத்தே பூத்துக் குலுங்கியது.

காலை 8.30 மணியளவில் அப்பயணம் ஆரம்பமானது. அந்த சுற்றுலாவில் நானும் ஓர் அங்கமாக இருந்தேன். நாம் அனைவரும் நட்பு எனும் வட்டத்தால் பின்னிப் பிணைக்கப்பட்டு இருந்தோம். புதிதாய் மலர்ந்த பூக்கள் போல் நாம் பூரித்தோம். நகரமோ கிராமமோ என்ன வித்தியாசம் இருந்தாலும் அபிவிருத்தி வேறுபாடு இருந்தாலும் கிராமத்தின் அழகு நகரத்தில் இருக்காது.அவ்வழகை இரசித்தபடி முதலாவதாக மாதகலுக்குச் சென்றோம்.மாதகல் கிராமத்தின் அழகும் இதமான தென்றலும் எம்மைக் குதூகலிக்கச் செய்தன.

இலங்கையிலே தேவநம்பியதீஸன் காலத்தில் பௌத்த மதம் பரப்பப்பட்டது.அதற்குமுன் இந்துமதமே இலங்கையில் பரவிக் காணப்பட்டது. இந்தியாவின் அசோக மன்னனுடன் கொண்ட நல்லுறவால் இலங்கையில் பௌத்த மதம் தோன்றியது. அசோகனின் புதல்வனான மகிந்ததேரர் தேவநம்பியதீஸனுக்குப் பௌத்த மதத்தைப் போதித்தான். பின்னர் அசோகச்சக்கரவர்த்தியின் புதல்வியான சங்கமித்தை வெள்ளரசங்கிளையுடன் ஜம்புகோளப்பட்டணத்திற்கு வந்திறங்கினார். இது நாம் அறிந்து கற்ற விடயங்கள். கற்ற இடத்தை நேரில் பார்ப்பதும் ஒருவித மகிழ்வுதான். அப்புனித இடத்தை நாம் மிகவும் இரசித்துப் பார்த்தோம். அமைதியான காலைப்பொழுது எம்மை இன்பலோகத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டது. புத்துயிர் அளிக்கும் புத்தர் சிலைகளைப் பார்த்தபோது எமக்கு ஞானஒளி தென்பட்டது போல் தோன்றியது. பின்பு மீண்டும் பேருந்தில் ஏறிஅமர்ந்து கொண்டோம். நாம் பாடல்கள் பாடி எம் மனஉணர்வை வெளிப்படுத்தினோம்.

அடுத்து நம் இந்துக்களின் புனித தலமான நகுலேஸ்வரத்திற்கு சென்றோம். இது ஐந்து ஈஸ்வரங்களுள் ஒன்றாக மிளிர்கிறது. அதிலும் இது யாழ்ப்பாணத்தில் அமைவு பெற்றுள்ளது மிகச் சிறப்பானதொரு விடயம் ஆகும். இந்தியாவிலிருந்து கீரிமுகமுடைய ஒரு முனிவர் இங்கு வந்து இப்புனித தலத்தில் நீராடியதால் கீரிமுகம் நீங்கி மனித முகம் தோன்றியதாக ஒரு புராணக்கதை உண்டு. இதனாலேயே இவ்விடம் கீரிமலை என அழைக்கப் படுகின்றது. நாம் ஆலயத்தினுள் சென்றோம். தெய்வத்தின்பால் ஈர்க்கப்பட்டோம். யுத்தத்தால் அழிவடைந்த இப்பொக்கிஷம் இப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தியமைக்கப்பட்டுள்ளதெனினும் அவ்வேலைகள் முற்றுமுழுதாக முடிவடையவில்லை. பல சிற்பங்கள் அவ் ஆலயத்தில் உண்டு. சிவனின் ஆடற்கோலங்கள் சுவர்ச்சிலைகளாக வடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. கலைத்தாகத்தைத் தீர்த்துக் கொள்ளும் ஆலயமாக இது உள்ளது. அங்குள்ள புனித கேணியையும் பார்த்தோம்.அங்கு இருந்தபோது எம்மில் தெய்வீகச் சிந்தனை குடிகொண்டது. இவ்வாறான ஆலயங்களை அழிவடையவிடாமல் காப்பது ஒவ்வொரு ஈழத் தமிழனுடைய கடமையாகும். நம் கலைகளை வெளிப் படுத்தும் ஓர் இடமாகவும் இவ்வாலயம் உள்ளது சிறப்பானதொரு விடயமாகும்.

பின்பு யுத்தத்தால் வெளியேற்றப்பட்ட இடம் பெயர்ந்த மக்கள் தற்போது பகுதியளவாக மீளக் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பிரதேசமான மாவிட்ட புரத்திற்கு சென்றோம். மாவிட்டபுரம் என்பதாவது குதிரை முகம் நீங்கப்பட்ட இடமெனக் கொள்ளப்படுகின்றது. அங்கே மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் அமைந்துள்ளது. அங்குள்ள இறைவனைத் தரிசிப்பதற்குச் சென்றோம். யுத்தத்தால் ஆலயம் சிதைவடைந்துள்ளது. யுத்த அகோரமே அதில் தென்பட்டது. மிகப்பிரமாண்டமாகத் திருவிழா நடைபெறும் இடமாக அது உள்ளது. ஆனால் இத்தலம் விரை வாகப் புனரமைக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். பின்பு அங்கு எழுந்தருளியுள்ள இறைவனைத் தரிசித்து விட்டு அடுத்த இடத்தை நோக்கிப் புறப்பட்டோம்.

கந்தரோடை அகழ்வாராய்ச்சி நிலையத்திற்குச் சென்றோம். அங்கு





நின்ற ஒருவர் கந்தரால் ஆளப்பட்ட இடம் என்பதால் கந்தரோடை என அழைக்கப் படுவதாகக் கூறினார். பெருங்கற்கால தமிழ்ப்பண்பாடு நிலவிய அவ்விடத்தில் பின்பு பௌத்த வழிபாடும் இருந்ததாக ஆராய்ச்சி யாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். அங்கே கண்டறியப் பட்ட பொருட்கள் யாழ்ப்பாண நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளன. அங்கே கந்தரோடை புத்தர் சிலையும் காணப்படுகிறது. அகழ்வாராய்ச்சிகள் நடைபெறும் முக்கிய இடங்களுள் ஒன்றாக இவ்விடம் விளங்குகிறது. தென்னிலங்கை மக்கள் இவ்விடத்தைப் பார்ப்பதற்காக வந்து செல்கின்றனர்.

பின்னர் பேருந்திலே ஏறிக்கொண்ட நாம் பாடல்களை இசைத்தபடியும் ஆட்டம் பாட்டத்துடனும் சென்றோம். பேருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது. அடுத்து மந்திரி மனைக்குச் சென்றோம். அம்மனை இடிந்த நிலையில் காணப்படுகிறது. கட்டட முன் சுவரின் மேற்புறத்தில் அம்மனை தொடர்பான செய்தி எழுதப்பட்டிருந்தது. அதை சுற்றிப் பார்த்துவிட்டு அருகிலுள்ள யமுனா ஏரிக்கு சென்றோம்.

ஏரிக்கு அருகில் செல்லும் போதே துர்நாற்றம் ஏற்பட்டது. மிகவும் மோசமான நிலையிலே அவ் ஏரி காணப்பட்டது. அது தான் வரலாற்றுச் சிறப்புமிக்க யமுனா ஏரி. இன்று தமிழரது வரலாறுகள் அழிவடைந்து செல்கின்றன. அவற்றைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். உரிய அதிகாரிகள் கவனமெடுத்து அவ் ஏரியை சுத்தப்படுத்த வேண்டும். வரலாற்று இடங்கள் நம் வாழ்வியலைப் பிரதிபலிப்பன. அவற்றை அழியவிடாது காப்பது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.




எமது பேருந்து அடுத்த இடமான சங்கிலியன் சிலை நோக்கி நகர்ந்தது. யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி மன்னனான சங்கிலியனின் உருவச்சிலை சிற்பமாக வடிக்கப் பட்டுள்ளது. அவர் குதிரை மீது ஏறி இருப்பதைப் போல அவ் உருவம் காணப்பட்டது. இதன் மூலம் சங்கிலியனின் வீரச்சிறப்பு எடுத்துக் காட்டப்படுகின்றது. சங்கிலியன் சிலை புதுப்பொலிவுடன் காட்சி யளிக்கின்றது. காலங்கள் சென்றாலும் கடந்த காலத்தைப் பிரதிபலிக்கும் இடங்களால் அவை மீண்டும் நினைவு கூரப்படுகின்றன.

அடுத்து யாழ்ப்பாணம் அருங்காட்சியகத்திற்குச் சென்றோம். வெளியே புதுவிதமாக ஏதோ தென்பட்டது. அது என்ன என்று அங்கிருந்தவர்களை வினவிய போது திமிங்கிலத்தின் எலும்பு எனக் கூறினார்கள். அக் காட்சியகம் சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய நாவலரின் இல்லத்தை உள்ளடக்கியிருந்தது. அக் காட்சியகத்தின் அமைப்பே வித்தியாசமாக இருந்தது. உள்ளே நுழைய நுழைய சென்று கொண்டே இருந்தோம். பண்டைய காலம் முதல் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலப்பகுதி வரையிலான பொக்கிஷங்கள் அங்கே பாதுகாக்கப்பட்டு வைக்கப் பட்டிருந்தன. பல இடங்களில் மேற்கொண்ட அகழ் வாராய்ச்சிகள் மூலம் பெற்றுக்கொண்ட பொருட்கள், கல்வெட்டுக்கள் அங்கே இருந்தன. கந்தரோடையில் பெற்றுக்கொண்ட பொருள்களும் அங்கே இருந்தன. அப்பொருள்கள் ஒவ்வொன்றையும் நாம் பார்த்துக் கொண்டு சென்றோம். அவை எம்மை புராதன காலத்திற்கு அழைத்துச்செல்வது போலத் தோன்றியது. தெய்வச்சிலைகள், தொட்டில்கள், 2ம்எலிசபெத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணியின்படம், பழைய கால கைப்பணிப் பொருட்கள், பல்லக்கு, ஆயுதங்கள், மண்பாத்திரங்கள், முத்து மாலைகள், நாட்டியம் ஆடும் பெண்ணின் உருவம் போன்ற பல அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவை பண்டைய காலத்தில் சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை போன்றவை மிகவும் சிறந்து விளங்கியது என்ற செய்தியை நமக்குத் தந்தன. அங்கு பொருட்கள் கண்ணாடிப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருந்தன. காலத்தின் அழிவுக்கரங்களில் இருந்து அதிர்ஷ்டவசமாகத் தப்பியவை அவை. அப்பொருட்களின் பெயரும் கண்ணாடிப் பெட்டியில் ஒட்டப்பட்டிருந்தது. இதனால் அவை பற்றி எம்மால் இலகுவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. பின் மனதைக் கவரும் இனிய சுப்பிரமணிய பூங்காவிற்கு சென்றோம்.



பூங்கா பச்சைப் பசேலெனக் காட்சியளித்தது. மனதிற்கும் உடலிற்கும் இன்பம் தரும் தென்றல் எம்மை இதமாகத் தாலாட்டிச்சென்றது. அங்குள்ள தாவரங்களையும் பூவினங்களையும் பார்த்து இன்புற்றோம். விசாலமான இடப்பரப்பில் அப்பூங்கா அமைவு பெற்றிருந்தது. இப்பூமியில் இரசிக்கத் தெரியாத மனிதர்கள் யாரும் இருப்பார்களா? பின்னர் ஊஞ்சல் ஆடியும் விளையாடியும் மகிழ்ந்தோம். நண்பர்களிடையே நட்பு அதிகமாகியது. நண்பர்களுக்கு இடையிலான கோபங்களை மறந்து இன்பக்கடலில் குதித்தோம். சிறிது நேரத்தின் பின் மதிய உணவை உண்டோம். குளிர்பானங்களை அருந்தினோம். சூரியன் அஸ்தமனமாவது போல் நம் சுற்றுலாவும் நிறைவு நேரத்தை நெருங்கியது.

இறுதியாக யாழ்ப்பாணக் கோட்டைக்குச் சென்றோம். யாழ்ப்பாண இராசதானி பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியது. பரராஜசேகரனின் பின் இறுதியாக மருமகனான சங்கிலி மன்னன் ஆட்சிக்கு வந்தான். இது ஆரம்பத்தில் பலம் பொருந்திய இராசதானியாகக் காணப்பட்டது. ஆயினும் அந்நியப் படையெடுப்பால் ஆட்சி முற்றுகையை எதிர்நோக்கியது. இக்காலப் பகுதியில் கண்டி ஆட்சியாளர்கள் யாழ்ப்பாணம் ஊடாக இந்தியாவுடன் வர்த்தக இராஜதந்திரங்களை வளர்த்துக் கொண்டனர். கி.பி1619ல் போர்த்துக்கேயத்தளபதியான பிலிப் த ஒலிவேரா, சங்கிலிமன்னனைத் தோற்கடித்து கி.பி 1621ல் யாழ்ப்பாணம் முழுவதையும் தன் ஆட்சியின்கீழ் கொண்டு வந்தான். சங்கிலி மன்னன் கோவைக்கு நாடு கடத்தப்பட்டதால் தமிழராட்சியும் முடிவுக்கு வந்தது. யாழ் கோட்டையை போர்த்துக் கேயர் கட்டினர். பின்னர் கி.பி1658ல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் விரிவான வகையில் அக் கோட்டையை விஸ்தரித்தனர். இவ்வாறான கோட்டையை நாம் பார்க்க மிகவும் ஆவல் கொண்டோம். கோட்டையின் அமைப்பு முறை மூலம் அது மிகப் பிரமாண்டமாக முன்பு காணப்பட்டமை தெளிவாகியது. அதைச் சுற்றி வரவே எமக்கு களைப்பு ஏற்பட்டது. அங்குள்ள அகழி, மேடை போன்றவற்றையும் பார்த்தோம். பாதுகாப்பிற்காக கோட்டையைச் சுற்றி அகழி அமைக்கப்பட்டு அதில் முதலைகள் விடப்பட்டதாக அறிந்துள்ளோம் அந்த வகையில் அவற்றை நேரில் கண்டது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கு நாம் சென்றதில் ஒருவித மகிழ்வு. ஆடல், பாடல் என இன்னொருவித மகிழ்வு. வாழ்க்கையை நாம் அனுபவிக்க வேண்டும். எந்த நேரமும் கல்வி கற்றுப் புத்தகப் பூச்சிகளாக இருக்கக் கூடாது. வருடத்தில் ஒரு முறையாவது கல்விச் சுற்றுலாவுக்கு செல்ல வேண்டும். இது எம் உள அறிவு விருத்திக்கு அவசியம். இச்சுற்றுலா நினைவுகள் எம் மனதில் பசுமரத்தாணி போல் பொறிக்கப்பட்டுள்ளது. என்றும் இல்லாத குதூகலத்தில் இருந்த நமது மனம் வாட்டமடையவும் தொடங்கிற்று. காரணம் பேருந்து பாடசாலையை நோக்கி வந்தது. எனினும் நண்பர்களுடன் இருந்த சந்தோசத்தில் எம்மையே நாம் மறந்தோம். மாலை 5.00 அளவில் எம் சுற்றுலா நிறைவுக்கு வந்தது. சுற்றுலா நிறைவடைந்தது. ஆனால் சுற்றுலா நினைவுகள் என்றும் எம் மனதை விட்டகலாது.

அனுபவமே நல்வாழ்வுக்கு அவசியம்.

**இ.லாவண்யா**
தரம் - 11B

**1ம் பக்கத் தொடர்ச்சி.....**

அணிகளும் மாகாண மட்டத்திற்கு 2 அணிகளும் பங்குபற்றி வெற்றியீட்டி தேசிய ரீதியிலும் தடம் பதித்தோம். இவ்வாறு 2011ம்ஆண்டு மூன்று அணிகளும் தேசிய மட்டத்திற்குத் தெரிவாகி சாதனை படைத்தோம். அதுமட்டுமல்லாது 2012ம் ஆண்டு இவ்வருடம் இரு அணிகள் தேசிய ரீதியில் பங்கு பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய வெற்றிகள் அனைத்தும் இறைவன் எமக்கு அளித்த கொடை ஆகும். யாழ் மாவட்டத்தில் எவ்வளவோ பிரபல்யமான பாடசாலைகள் காணப்பட்டாலும் எங்களது பாடசாலை இவ்வாறான வெற்றியைப் பெறுவது எனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. எமது பாடசாலைக்கு இவ் விளையாட்டுத்துறையை வளர்த்துக் கொள்ள போதியளவு வளம் இல்லாவிட்டாலும் இச் சாதனைகள் தொடர்கின்றன என்றால் அதற்கு எங்களது விடா முயற்சியே முதற்காரணமாகும் ஒரு வருடம் எங்களால் வெற்றி பெற முடியவில்லை என்றால் சோர்ந்து போவதில்லை "வெற்றியின் முதற்படி தோல்வி" என ஏற்றுக் கொண்டு சாதனைகளை தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றோம். விளையாட்டு என்பது கல்விக்கு எந்தவித இடையூறையும் கொடுக்காது. ஏனெனில் விளையாடிக் கொண்டு படிப்பது மிகச்சுலபம். நாம் உற்சாகத்துடன் கல்வியை கற்க முடிகின்றது. நாம் விளையாடி கல்வியில் பின்தங்கி விடுவோம் என்ற மனப்பயத்தால் மிகவும் சிறப்பாக கல்வியை கற்போம். இது எனது அனுபவம்.

வலைப்பந்தாட்ட அணி வீரர் (Under-19)
ந.தர்சிகா
A/L 2013 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் கணித பாட ஆசான்



யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு இறைவனால் கொடுக்கப் பட்ட கணித பாட ஆசிரியர் திரு. சுப்ரமணியம் அவர்கள் எமது பாடசாலைக்கு 1986 மே மாதம் 01ம் திகதி தெரிவாகி வந்தார். இவர் வந்ததன் பிற்பாடு எமது பாடசாலை மாணவர்களின் கணிதபாடத்துறையின் வளர்ச்சியானது மென்மேலும் அதிகரித்து காணப்பட்டது. கணித பாடத்துறைக்கு மட்டுமல்லாது ஏனைய விளையாட்டுத் துறைகளுக்கும், இணைபாடவிதான செயற்பாடுகளுக்கும் மாணவர்களை வழிகாட்டுவதில் இவர் ஊன்றுகோலாகக் காணப்பட்டார். இவர் பாடசாலையின்சுத்தங்கள்மற்றும் வகுப்பறைச் சுத்தங்கள் போன்றவற்றிலும் அக்கறை யுடையவராகக் காணப்பட்டார்.

கல்லூரிக்காலங்களில் நேரகாலத்துடன் பாடசாலைக்கு வருகை தந்து தனது கடமைகளை ஒழுங்குறச்செய்து முடிப்பதில் ஆர்வமுள்ளவர். தினமும் பாடசாலையின் சுற்றாடல்சுத்தங்களுக்கு பொறுப்பான வகுப்பு மாணவர்களை அவர்களது கடமைகளைச் செய்வதற்குப் பெரிதும் உதவுபவர்.

இது தவிர தரம் 11 சாதாரணதர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு தன்னால் இயன்ற வரையில் பாடசாலை நேரங்களை விட மேலதிகமான வகுப்புக்களை நடாத்தி அம்மாணவர்களுக்கு வழிகாட்டுவதில் ஆர்வமுள்ளவராவார். இதை விட மாணவர்களுடன் பழகுவதில் மிகவும் விருப்பமுள்ளவர். ஏழை, பணக்காரர் எனப்பாகுபாடு பாராமல் மிகவும் அன்புடன் நடந்து கொள்பவர். மாணவர்கள் சிலர் தவறான பாதையில் செல்ல முற்படின் மிக இயல்பாகவும் இனிமையாகவும் நல்லவை பற்றிக்கூறி அவர்களின் கவனத்தை படிப்பில் செலுத்தி விடுவார்.

பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்திலும் முதல் நபராக நின்று அனைத்து உதவி களையும் செய்வார். இதைவிட சமயம் சம்பந்தமான விழாக்கள், முக்கியமாக நவராத்திரி விழாவின்போது அனைத்து மாணவர்களையும் சுத்தமாக வருகை தரச்செய்வார். அது மட்டுமல்லாது அந் நிகழ்வுகளின் போது மாணவர்கள் தவிர ஆசிரியர்களுக்கும் ஊக்கியாக் காணப்படுவார்.

எமது பாடசாலையில் இவர் 24 வருடங்கள் சிறந்த முறையில் பணியாற்றி 2010ம் ஆண்டு தனது ஆசிரியர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.ஆனால் அவர் தான் கற்பித்த பாடசாலையின் நிகழ்வுகளுக்கும் சரி ஏனைய நிகழ்வுகளிலும் வந்து ஆசிரியர்களையும் தனது மாணவர்களையும் சந்தித்து அவர்களை இன்னும் கல்வி கற்று சிறப்புற வாழவேண்டும் எனவும் வாழ்த்திச் செல்வார். அவ்வாறான ஆசிரியர் எமது பாடசாலைக்கு கிடைத்ததையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஆன்சலின்
A/L [2013].

## நாம் பார்த்த கண்காட்சி

10.10.2011 அன்று எமது கல்லூரியில் "சிகரம்" என்னும் கண்காட்சி ஆரம்பப்பிரிவினரால் நடாத்தப் பட்டது. இதை எமது ஆரம்பக்கல்வி உதவிக் கல்விபணிப்பாளர் திருமதி ரூபா உதயரட்ணம் அவர்கள் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார். தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான வகுப்புக்களுக்கு கற்பிக்கக் கூடிய அனைத்து உபகரணங்களும் வைக்கப் பட்டிருந்தன. கணித பாடத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் கணக்குகளை இலகுவாகச் செய்யும் முறைகள் பற்றிய உபகரணங்கள் பல இருந்தன. ஆரம்ப விஞ்ஞானப் பாடத்தில் மின்சாரம், காந்தம், வேலைகளை இலகுவாக்கும் பொறிகள், விதைகள் முளைத்தல், மண்ணின்வகை, எம்மைச் சூழவுள்ள வளி, நாம் உணரும் காற்று , எமது இயந்திர சாதனங்கள் பற்றிய பல தகவல்களைத் தரும் உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. சுற்றாடல்பாடத்தில் தாவரங்கள், பிராணிகள், உணவு, போக்குவரத்து போன்றவற்றை விளக்கும் பல உபகரணங்கள காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.



ஆங்கிலம், தமிழ், சிங்களம், உடற்கல்வி ஆகிய பாடங்களிலும் பாடத்திற்கேற்ப பல உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. மேலும் உருக் கோளங்கள் தெளிவாக மின்குமிழ்களினால் ஒளிரவிடப் பட்டிருந்தமை சிறப்பாக இருந்தது. பாடசாலையில் காட்சிக்கு சிறு பாடசாலைத் தோட்டம் அமைக்கப்பட்டி ருந்தது. அங்கு பல மரம் செடி கொடிகள் இருந்தன. தோட்டத்தில் மலையும், அதிலிருந்து ஓடும் அருவியும், நீர்வீழ்ச்சியும், ஆறும், அது குளத்தைச் சென்றடையும் பாதையும், குளத்தின் பகுதிகளும் சிறப்பாகக் காட்டப் பட்டிருந்தது. மேலும் தென்னம் மட்டையினால் வட்ட வடிவமாக செய்யப்பட்ட இரண்டு உயர் பாத்திகளின் ஒன்றில் கீரையும் மற்றையதில் வல்லாரையும் பயிரிடப் பட்டிருந்தது. ஆசிரியர்களும் மாணவர்களும் பார்க்க வருவோர் கேட்கும் வினாக்களுக்கு விடையளித்தனர். நன்றாகத்திட்டமிட்டு இக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. தொடர்ந்தும் வருடாந்தம் இவ்வாறான கண்காட்சிகளை மாணவர்களாகிய நாம் ஒழுங்கு செய்து நடாத்த வேண்டும் என்ற எண்ணம் மாணவர் மத்தியில் எழுந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

தரம் 6 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2010, 2011இன் பதிவுகளில் சில....

**வடமாகாணப் பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டி - 2010**

**சண்டிலிப்பாய் இந்துவின் சாதனை வீராங்கனை சங்கீதா**




**செல்வி சங்கீதா தவகுலசிங்கம் மாகாணத்தின் முதன்மை வீராங்கனை (15வயது ) (நீளம்பாய்தல் 1ம் இடம், ஈட்டி எறிதல் 1ம் இடம், உயரம் பாய்தல் 2ம் இடம்)**

சாதனைப் புயலாய் எழுவாய்
சரித்திரம் படைத்தே உயர்வாய்
தாய் தந்தைக்கு மகிழ்வாய் - மகளே!
சிறந்த வெற்றிகள் சேர்ப்பாய்








2010 பரிசளிப்பு விழாவும், அமுதவிழா மலர் வெளியீடும்

- 2010 ஆங்கில தின வலயமட்ட நாடகப் போட்டியில் எமது கல்லூரி 3ம் இடத்தைப் பெற்றது
- 20110 மாகாண மட்டத்தில் நடைபெற்ற துரித கணிதப் போட்டியில் தரம் - 3 த. டிசானி 1ம் இடம்
- 2010 HNB தினக்குரல் அனுசரணையுடன் நடாத்திய சதுரங்கப் போட்டியில் ர.வினுஜன் யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றார்
- 2010 மகாஜனாக் கல்லூரி தேசிய ரீதியாக நடாத்திய நூற்றாண்டு விழா கட்டுரைப் போட்டியில் கீழ்ப் பிரிவில் ச. ஜெதுசா 1ம் இடத்தை பெற்றார்.
- 2012 நடை பெற்ற DO You Know மாகாண மட்ட போட்டியில் சந்திரன் சிந்துஜா 3ம் இடதைப் பெற்றார்.

## *பசுமை விருதுகள்-2011*

எமது பாடசாலையைச் சேர்ந்த மேல் வருவோர் பசுமை விருதுகளை பெற்றனர்.

- சந்திரன் சிந்துஜன்
- ஜனகன் சுகிதரன்
- குமாரவேலு காயத்திரி
- சந்திரசேகரம் இசையரசி
- பூமிராசா கோகிலாத்

2010 க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் எமது கல்லூரியைச் சேர்ந்த செல்வி.வி.சர்மிளி, செல்வி.கி.யுலக்ஷினி ஆகிய இருவரும் 9 'A' பெறுபேற்றினைப் பெற்று கல்லூரிக்கு புகழை ஈட்டித் தந்துள்ளனர்.இவர்களுக்கு உளமார்ந்தவாழ்த்துக்கள்.







செல்வி .வி.சர்மிளி 9'A' சித்தி பெற்றமைக்காக இந்திய கல்விச் சுற்றுலா சென்ற வேளையில்......

## *கண்ணீர் அஞ்சலி*

தோற்றம்
28 - 10 - 1958



மறைவு
24 - 11 - 2011

**கணபதிப்பிள்ளை விக்கினேஸ்வரராசா**

(விவசாய ஆசிரியர் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

*பழகிய நாள் சிறிது-எம்முடன்*
*பரிமாறிய அன்போ பெரிது*
*சிலநாட் பழகி சீரிய அன்பை*
*விதைத்தோமே- அன்பு*
*முளைவிட்டுப் பயிராகும் முன்னே*
*முனை முறிந்து போன தேனோ?*
*அலைந்து உம்மைத் தேடுகின்றோம்*
*ஆரினி எமக்கு ஐயா.*




சாரணர் ஒன்றுகூடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலமைப்பரிசில் விழா - 2010



ஆசிரியர்தின விழா - 2012
சங்கீதக்கதிரை நிகழ்ச்சி



ஆரம்பப்பிரிவின் கால்கோள் விழா - 2011


## கரப்பந்தாட்டம்

| பிரிவினர் | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| 15வயது | மாவட்டம்-2ம் இடம் | கோட்டம்-2ம் இடம் | வலயம்-2 இடம் |
| 17வயது | வலயம்-1ம் இடம் | மாவட்டம்-2ம் இடம் | மாகாணம்-2 இடம் |
| 19வயது | வலயம்-1ம் இடம் | வலயம்-2ம் இடம் | வலயம்-2 இடம் |

- ✯ DSI 2010 17 வயது ஆண்கள் பிரிவு 2ம் இடம்
- ✯ DSI 2012 19 வயது பெண்கள் பிரிவு 2ம் இடம்







NATIONAL CADET CORPS ANNUAL ASSESSMENT CAMP 2012.20TH BATTALION



சர்வதேச உளநல நாள் விழா - 2012



MILO CUP தேசியமட்டப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய வலைப்பந்தாட்ட அணியினரை வரவேற்கும் வேளையில்...




கூடைப்பந்தாட்ட அணி - Under 19



நவராத்திரி தின கோலப்போட்டி - 2012



விஞ்ஞானக் கண்காட்சி - 2012



தமிழ்த்தினப்போட்டி சிந்துநடைக் குழுவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த மாணவர்களில் ஒருவராக திகழ்ந்தவர் சுந்தரலிங்கம் தேவகி. கல்வி விளையாட்டு இணைபாடவிதான செயற்பாடுகள் என அனைத்துத் துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்தவர். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று O/Lஇல் 10A, A/L 2009 இல் 3A எடுத்த தேவகி வலைப்பந்தாட்ட அணியில் தலைவியாக இருந்து தேசியமட்டம் வரை கல்லூரி அணியை வழிநடத்தியவர். மாணவருக்குரிய தகைமைகள் அனைத்தையும் ஒருங்கே கொண்டிருந்த தேவகி அவர்களுடன்*

## ஒரு நேர் காணல்

**01. *உங்கள் குடும்பம் பற்றி எங்களுடன் பகிர முடியுமா?***

ஆம். எனது தந்தையின் பெயர் பொ.சுந்தரலிங்கம். தாயார் சு.மங்களேஸ்வரி. எனக்கு ஓர் அக்கா உள்ளார். எனது சொந்த இடம் அளவெட்டி. நாட்டுச் சூழ்நிலை காரணமாக 1993 இல் இடம் பெயர்ந்து 2009 வரை சண்டிலிப்பாயில் வசித்து வந்தோம். தற்போது அளவெட்டியில் வசிக்கின்றோம்.

எனது குடும்பத்தினர் என் கல்வி வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக இருந்து வருகின்றனர். குறிப்பாக ஆங்கில மொழியைக் கற்பதற்கு எனது தந்தை பெரும் பங்கு வகித்துள்ளார். என் தாயார் வீட்டு வேலைகளைச் செய் என்று கூறுவதேயில்லை. சொல்லப்போனால் எனது வேலைகளைக் கூட அவரே செய்து தருவார்.

**02. *கல்வி ரீதியாக உங்களது அடைவு நிலை குறித்து கூறுங்கள்?***

நான் புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளையும் O/L இல் 10A சித்திகளையும் உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் 3A சித்திகளையும் பெற்றேன். இச் சித்திகளை பெறுவதற்கான உக்தி எனக் கூறினால் நான் ஆசிரியர் கற்பிக்கும் போது வகுப்பறையிலே அக்கறையுடன் அவ் விடயத்தைக் கிரகித்துக் கொள்வேன். அதனால் அதை திருப்பிப் படிக்கும் போது இலகுவாக இருக்கும். அத்தோடு எவ் விடயமானாலும் அதை விளங்கி ஒரு விடயத்தோடு இன்னொன்றை தொடர்புபடுத்தி ஞாபகப்படுத்திக் கொள்வேன்.

**03. *விளையாட்டுக்களில் பங்குபற்றுவதால் கல்வி பாதிக்கப்படும் என நீங்கள் கருதுகிறீர்களா?***

விளையாட்டு கல்வியைப் பாதிக்கும் என்பதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். விளையாட்டு கல்வி கற்பதற்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் வழங்குகின்றதென்றே கூறுவேன். நான் எனது கல்லூரி வாழ்வில் வலைப்பந்தாட்ட அணியில் தரம் 8 இலிருந்து உயர்தரம் வரை விளையாடியுள்ளேன். வலைப்பந்தாட்ட போட்டி என்றாலே அதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிதான் Champion என்பதை எமது அணியும் இரு தடவை மாகாண Champion களாக வந்து தேசிய மட்டப்போட்டி வரை பங்கேற்று நிரூபித்தோம்.

**04. *கல்லூரி காலத்தில் கல்வி. விளையாட்டு தவிர வேறு எந்நிகழ்வுகளில் உங்கள் திறமையை வெளிப்படுத்தினீர்கள்?***

விளையாட்டுத் தவிர கல்லூரியில் மாணவத் தலைவியாகவும் பின்னர் சிரேஸ்ட மாணவ தலைவியாகவும் இருந்துள்ளேன். மற்றும் சமூகக் கல்விப் போட்டி, தமிழ்த் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி என்பவற்றில் பங்கேற்று கோட்ட மட்டத்தில் பரிசில்களைப் பெற்றுள்ளேன். விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் மாகாண மட்டப் போட்டியில் பங்கேற்றுள்ளேன். உயர் தர வகுப்பு மாணவ அணிகளிடையே இடம்பெற்ற வர்த்தக வினாடி வினாப் போட்டியில் பங்கேற்று எமது அணி வலயமட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.

**05. *O/L பரீட்சையில் உயர்ந்த பெறுபேறை பெற்ற நீங்கள் வர்த்தகத் துறையைத் தெரிவு செய்தமைக்கான காரணம் என்ன?***

உயர் தரப் பிரிவில் Commerce ஐ தெரிவு செய்வதற்கான காரணம் எனக் கூறுவதானால் O/L இல் Commerce படிக்கும் போதே Commerce படிப்பதில் இருந்த ஆர்வமும் Accounce இல் கணக்குகள் செய்வதில் இருந்த விருப்பமுமே காரணம் ஆகும். அத்தோடு Commerce இல் ஒரே மாதிரியான விடயங்களை அல்லாது கால மாற்றத்திற்கு ஏற்ப நடைமுறை விடயங்களை கற்கக் கூடியதாக உள்ளதுமே.

**06. *இன்றைய பெண்களின் நிலை குறித்து உங்களது கண்ணோட்டம் எவ்வாறு உள்ளது?***

முன்னைய காலங்களை விட இன்று பெண்களின் கல்வி நிலை உயர்ந்துள்ளதோடு எத்துறையை எடுத்துக்கொண்டாலும் ஆண்களுக்கு சரிநிகராக பெண்களும் காணப்படுகின்றனர். அத்தோடு பெண்கள் தொழில் செய்தால் என்ன, தொழில் செய்யாவிட்டால் என்ன, பெண்கள் கண்டிப்பாக கல்வி கற்க வேண்டும். ஏனெனில் அவர்கள் சமுதாயத்திற்கு தன்னம்பிக்கையுடன் முகங்கொடுப்பதற்கும் அவர்களுக்கெதிராக ஏற்படுத்தப்படுகின்ற அடக்கு முறைகளிலிருந்து விழித்துக் கொள்வதற்கும் ஒரு பெண் படித்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. நீங்கள் இப்போது பாடசாலையை விட்டு வெளியேறியுள்ளீர்கள் பாடசாலைலைக் காலம் பற்றிய உங்களது மனநிலை தற்போது எவ்வாறு உள்ளது?**

என் பாடசாலைக் கல்வியை யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலே தொடங்கி முடிவு செய்துள்ளேன். உண்மையை கூறுவதென்றால் வேறு பாடசாலைகளில் கற்றிருந்தால் விளையாட்டிலும் கல்வியிலும் இவ்வாறான ஒரு நிலையைப் பெற்றிருக்க மாட்டேன் என்றே கூற வேண்டும். ஏனெனில் எனக்குள் இருந்த திறமைகளை வெளிக்கொணர்ந்து தட்டிக் கொடுத்து பக்க பலமாக இருந்தவர்கள் என் கல்லூரியும் ஆசான்களுமே.

**08. மாணவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீகள்?**

மாணவர்கள் ஆசிரியர் கற்பிக்கும் போது அக்கறையுடன் அவதானிப்பதன் மூலமும் பின்னர் கற்கும் போது ஒவ்வொரு விடயத்தையும் விளங்கிப்படிப்பதன் மூலமும் சிறந்த பெறு பேற்றைப் பெற முடியும். அத்தோடு கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை இதர செயற்பாடுகளுக்கும் அளிக்க வேண்டும்.

நேர்கண்டவர் : சி. தர்சினி
2011 கலைப்பிரிவு

## எழுத்தாற்றலால் முத்திரை பதித்தவர்



எழுத்தாற்றலால் தனக்கென தனித்துவமான முத்திரையினை பதித்தவர் ந.துஷாந்தி. மாவட்ட ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் நடைபெற்ற கட்டுரை போட்டிகளில் பங்கு கொண்டு பரிசுகள் பலவற்றை பெற்ற இவர் 2011 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 2A, B பெறுபேற்றையும் பெற்றுள்ளார். அவர் பெற்ற வெற்றிகளில் சில........

01. தேசிய ரீதியாக புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் 2010.2011 ஆகியன இரு வருடங்களில் முதலாம் இடத்தினையும் பெற்று 20000 பெறுமதியான பணப்பரிசினையும் பெற்றுக் கொண்டார்.
02. மகாஜனா கல்லூரியின் நூற்றாண்டுவிழா-1ம் இடம் (தேசிய மட்டம்)
03. கொக்குவில் இந்துக் கல்லூரி நூற்றாண்டுவிழா-1ம் இடம் (மாவட்ட மட்டம்)
03. மானிப்பாய் இந்துக் கல்லூரி நூற்றாண்டுவிழா-1ம் இடம் (மாவட்ட மட்டம்)
04. பிரதேசசெயலகம் சர்வதேச முதியோர் தினம் பேச்சுப் போட்டி-1ம் இடம்

# வட்டுக்கோட்டைக் கூத்தும் கிராமியக் கலைகளும்

## - நூல் அறிமுகம் -




பண்பாட்டுப் பொக்கிசங்களாக உள்ள கலைகள் பெட்டகங்கள் பூட்டி வைக்கப்பட்டனவாக இருத்தல் கூடாது என்ற வகையில் மக்களின் பாரம்பரியங்களையும் பண்பாட்டையும் உருவாக்கிப் பேணுவதில் கலை இலக்கியங்களும் முக்கியபங்கு வகிக்கின்றன. வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கலாபூஷணம் கந்தையாநாகப்பு அவர்களால் வளர்த்தெடுக்கப் பட்ட இந்நூலானது பல வித விடயங்களைத்தாங்கி வந்துள்ளது.

எமது பாரம்பரியக் கலைகளையும் அதன் ஊற்றுக் கால்களையும் ஒட்டங்களையும் பதிவுசெய்யவேண்டிய பொறுப்பு எம்முன் பரந்து கிடக்கின்றது. என்பதை முன்னிலைப்படுத்தி இந்த நூலிலே பல்வேறு விடயங்கள் பதிவாயுள்ளது! அழகான படங்கள் வட்டுக்கோட்டைக் கலைப் பாரம்பரியத்தை பதிவு செய்து இந்நூலுக்கு அணிசேர்க்கின்றன. ஆய்வு நோக்கத்துடன் வெளிவரும் இந்நூல் அனுபவ வெளிப்பாடாகவும் அமைந்துள்ளது.

இந்த வகையில் வட்டுக்கோட்டையின் பழமைவாய்ந்த சிறப்புபெற்ற வடமோடி நாட்டுக் கூத்துக்களையும் கிராமியக் கலைகளையும் வெளி உலகிற்குக் கொண்டுவரும் நோக்குடன் அதனை நூல் வழவில் வழவமைக்கப்பட்டுள்ளது அழிந்து போகும் பாரம்பரிய கலைகளை அழி யவிடாது அதற்கு உயிர்ப்புக் கொடுத்து இனி வரும் இளம் சமுதாயத்திற்கு ஓர் அறிவு நூலாகவும் முக்கியஆவணமாகவும் அமைகிறது.

இப் பணியிளைவட்டுக்கோட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த மரபுவழிக்கலைஞர்கள் தலைமுறை இடைவெளி அல்லாது தொடர்ச்சியாக செய்து வருவது மகிழ்வைத் தரும் ஒன்றாக உள்ளது. எதிர்காலச் சந்ததியினருக்காக ஆவணப்படுத்தப்பட வேண்டுமென்பதற்காகவும் இதுவரையில் இக்கலைகள் பற்றி அறியாதோர் அறிந்து கொள்ள வேண்டும்மென்பதற்க்காகவும் நூலாசிரியரின் ஒப்புதலுடன் வெளிப்பட்டுள்ள இந்நூல் கலை ஆர்வலர்களுக்கு மிகப்பயனுடையதாகும்.

க. சுகன்ஜா
2013 கலைப்பிரிவு.

## பழமையான வெற்றிக்கிண்ணம்



பிரித்தானியாவின் மன்னான King George VI (1936 – 1952) இன் முடிசூட்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டியில் எமது கல்லூரிக்குக் கிடைக்கப்பெற்ற வெற்றிக் கிண்ணம் இதுவாகும். இக் கிண்ணம் 12.05.1937 அன்று வழங்கப்பட்டது.

(Cordination sports cup won by Sandilipay Hindu English School - 12th May 1937)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரியை அணிசெய்த அதிபர்கள்

80 ஆண்டுகளை கடந்து யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியானது புகழ் மிக்க பாதையில் பயணிப்பதற்கு 1929 தொடக்கம் இன்று வரை பாடசாலை வளர்ச்சிக்கு அரும் பாடுபட்டுள்ள அதிபர்களின் அர்ப்பணிப்பும் தூரதரிசனமும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

**திரு.ப.மு.செகராஜசிங்கம்**



யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகரான திரு.ப.மு. செகராஜசிங்கம் அவர்கள் தனது சொந்த காணியில் யா.சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப் பாடசாலைக்கு 1929 இல் வித்திட்டார். 1929 தொடக்கம் 1940 வரையான காலப்பகுதியில் அதிபராக இருந்த செகராஜசிங்கம் பல வழிகளிலும் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். இவரது தன்னலம் கருதாத பொது நலசேவையை இக்கல்லூரி வாழும் நாள் வரை மறவாது இருக்கும் என்பதில் ஐயமில்லை. இவரைத் தொடர்ந்து இப்பாடசாலை வளர்ச்சிக்கு வித்திட்டவர்களாக திருவாளர். தில்லையம்பலம்(1941-1954) சுப்பிரமணியம் (1955-1965) W.பிச் (1966-1968) ஏள.இராசசுந்தரம் (1967-1970) ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றி பெரும் பங்களிப்பினை நல்கினர். இவர்கள் காலத்திலும் பாடசாலை குறிப்பிட்ட மாற்றங்களை கண்டது.



கல்லூரியின் வரலாற்றில் முக்கிய கால கட்டமாக திருமதி.ப.சிவானந்தராஜாவின் (1971-1978) பதவிக்காலம் அமைந்தது. இக்கால கட்டத்தில் தமிழ் மொழிக்கல்வியை வழங்கி வந்த யா.சண்டிலிப்பாய் அமெரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலை, யா.சண்டிலிப்பாய் வாணி நிகேதன வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் யா.சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப்பாடசாலையுடன் இணைக்கப்பட்டு யா.சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் எனப் பெயர் பெற்று தனது அளவை விசாலித்துக் கொண்டது.


யா/சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயமாக பெயர் மாற்றம் பெற்ற பின்பு தொடர்ந்து திருவாளர் க.வைத்தியநாதஐயர் (1979-1985) செ.அமுதலிங்கம் (1985) ஆ.மூர்த்தி (1985-1986) பரராஜசிங்கம் (1986-1987) ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றினர். இவர்கள் பணிகளும் கல்லூரி வரலாற்றில் சிறப்பிடம் பெற்றமையை வரலாற்று ரீதியாக அறியமுடிகிறது.

1988இல் அதிபராக பதவியேற்ற திரு.சோ.சோமசேகரம் 1992 வரை கடமையாற்றினார். இவரது பதவிக் காலத்தில் பாடசாலை மதிலமைத்தல், மின் இணைப்பு, நீர் விநியோகம் போன்ற சேவைகள் நிறை வேற்றப்பட்டு அத்துடன் மைதானமும் விஸ்தரிக்கப்பட்டது. இவரது பதவி காலத்திலே திரு.நா.கணபதிப்பிள்ளை ஆசிரியரால் பாடசாலை கீதம் இயற்றப்பட்டது.

1992ஆம் ஆண்டு திரு.சோ.சோமசேகரம் அவர்கள் இளைப்பாறிய பின்னர் திரு.ச.சிவநேஸ்வரன் அதிபராக பொறுப்பேற்றார். எமது கல்லூரி பல வெற்றிகளையும் வளர்ச்சிகளையும் சந்திப்பதற்கு வழி சமைத்து தந்த அதிபராகத் திகழ்ந்தவர் திரு.ச.சிவநேஸ்வரன் அவர்கள். இவரது காலத்தில் தான் க.பொ.த உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு தரம் 1C பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. தொடர்ந்து 1999இல் யாழ் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியாக பெயர் மாற்றம் பெற்றது. 2002இல் 19, 17 வயது பிரிவு வலைப்பந்து அணியினர் வட கிழக்கு மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டனர். 2004 இல் க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேற்றில் 100க்குட்பட்ட மாணவர் தொகை பாடசாலைகளில் யாழ்மாவட்டத்தில் 2ஆம் இடம் பெற்று சாதனை படைத்தமை, 2005இல் க.பொ.த உயர்தரத்தில் 1C பாடசாலைகளில் யாழ்மாவட்டத்தில் 1ஆம் இடம் பெற்றமை, போன்ற பதிவுகள் இடம் பெற்றன. இதுமட்டுமல்லாது பாடசாலையின் பௌதீக வளத் தேவைகளை பல சிரமங்கள் மத்தியில் நிறை வேற்றியமையும் குறிப்பிடத்தக்கதாகும். இன்று நிமிர்ந்து நிற்கும் கட்டடங்களுக்கு இவரது முயற்சியே காரணமாகும். இக் கல்லூரியின் சகல துறை வளர்ச்சியிலும் தன்னை ஈடுபடுத்தி உயர்நிலைக்கு கொண்டு வந்த திரு.ச.சிவநேஸ்வரன் அதிபர் 22.04.2005இல் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றலாகிச் சென்றார். சண்டிலிப்பாய் இந்துவுக்கு அனைவரிடத்திலும் இடத்தைப் பெற்றுக் கொடுத்த பெருமை சிவநேஸ்வரன் அவர்களைச் சாரும்.

திரு.ச.சிவநேஸ்வரன் அதிபர் அவர்களின் இடமாற்றத்தை தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராக இருந்த திரு.வ.ஸ்ரீகாந்தன் அவர்கள் கல்லூரியின் அதிபராக பொறுப்பேற்று கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார். இவர் கடமையாற்றிய 5வருட காலத்திலே நீண்ட கால கனவாக இருந்த நிறுவுநர் சிலை கல்லூரியில் அழகுற அமைக்கப்பட்டது. பவள விழா மண்டபம் விஸ்தரிக்கப் பட்டது. நீண்ட காலத் தேவையாக இருந்த மாணவர் ஆசிரியர் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டது. இவ்வாறு பல பௌதீக வளத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. இது மட்டுமல்லாது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல துறை சாதனைகளை நோக்குமிடத்து இலங்கை சுற்றாடல் அதிகார சபையினால் வருடந்தோறும் நடாத்தப்படும் ஆரோக்கியமான சிறந்த சுற்றாடலைக் கொண்ட பாடசாலைத் தெரிவில் 2007ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் 2ஆம் இடத்தையும் 2008ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் 1ஆம் இடத்தையும் எமது கல்லூரி பெற்றுக் கொண்டது. கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்ற பெருவிளையாட்டுக்களிலும் எமது பாடசாலை தேசிய ரீதியில் தடம் பதித்துள்ளது. 2007ஆம் ஆண்டு இரண்டு வீரர்கள் தாயக அணியில் இடம்பெற்று வலைப்பந்தாட்ட அணியில் பங்கு பற்றியுள்ளனர். 2009ஆம் ஆண்டு கூடைப்பந்தாட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அவ் வருடமே அவ் அணி வலய மட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. இவ்வாறு விளையாட்டுத்துறையில் மட்டுமல்லாது கல்வித்துறையிலும் பல சாதனைகளை சந்தித்துள்ளது.

# பாரம் சுமக்கின்றோம்

ஒற்றுமையாய் ஒன்றுகூடவும்
ஒத்து நின்று வழிபாடாற்றவும்
ஒரு ஒழுங்கமைந்த
மண்டபமின்மையால்
பாரம் சுமக்கின்றோம்
நாமிங்கே........



விழா நாட்களில்
கதிரை மேசைகளைக்
காவிச் செல்வதே
எம் கடமையாகியதால்
கண்ணீர் விட்டுக்
கதறுகின்றன.......
கதிரைகளும் மேசைகளும்
எமக்கு சாபவிமோசனம்
தாருங்கள் என........

விழா எடுக்க
வேண்டுமென்ற
எம் விருப்பங்கள்
கரைய
குருதி சொட்ட சொட்ட
கொண்டு செல்லப்படுகின்றன
கதிரைகள்.



பெரியோர்களே!
எமக்கு ஒரு மண்டபம்
கட்டித் தரக்கூடாதா......
ஒற்றுமையாய்
ஒன்று கூடவும்
ஒத்து நின்று
வழிபாடாற்றவும்
ஒரு மனதாய்
விழா எடுக்கவும்
ஒழுங்கமைந்த ஒரு மண்டபம்
வருமென்ற நம்பிக்கையில்
பாரம் சுமக்கின்றோம்

**ட.சுகன்ஜா**
**2013 கலைப்பிரிவு.**

கல்லூரியின் வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் உழைத்த ஸ்ரீகாந்தன் அவர்கள் இடமாற்றலாகி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்குச் சென்றாலும் அவர் செய்த பணிகள் எம்முன் எப்போதும் நினைவுகளின் சின்னமாக இருக்கும்.

எமது சண்டிலிப்பாய் சமுதாயத்துக்கு வழிகாட்டியாக திகழும் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு தற்போது இக் கல்லூரியின் உப அதிபராக பணி புரிந்து பின் யா/ ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலையில் அதிபராகி பணியாற்றிய திரு.கு.விமலன் அவர்கள் கல்லூரியின் அதிபராக நியமனம் பெற்று கல்லூரியின் வளர்ச்சியில் அனைத்துத் துறைகளிலும் ஊக்கத்துடன் செயற்படுகின்றமை எமக்குப் பெரு மகிழ்ச்சியை தருகிறது.

**ஞா.பிரசாந்தினி**
**2013, கலைப்பிரிவு.**

# எல்லாம் மூன்றெழுத்து

அன்பு எனும் மூன்றெழுத்தில்
பண்புடனே நான் வாழ
தென்றல் காற்றைப் போல் நீ வந்தாய்

பண்பு எனும் மூன்றெழுத்தில்
பணிவுடனே நான் பயில
பகலவனைப் போல் வந்தாய்

நட்பு எனும் மூன்றெழுத்தில்
மகிழ்வுடனே நான் சிநேகிக்க
நண்பி என்று ஓடி வந்தாய்

கல்வி என்ற மூன்றெழுத்தில்
வாழ்வினிலே நான் உயர
ஏணியாய் நீ வந்தாய்-என் வாழ்வுதனில்

பொன் என்ற மூன்றெழுத்தால்
பொய்யின்றி நான் வாழ்ந்து
பன் மடங்கு பயன் பெற்று
பாரினிலே நான் உயர்வேன் தினம் தினமும்

பத்து எனும் மூன்றெழுத்தில்
சுமையை சுவையென சுமந்தெடுத்த எம் அன்னை
வாழ்கவென வாழ்த்திடுவோம் கல்விதனில்

தமிழ் எனும் மூன்றெழுத்தில்
தமிழ் அன்னை தாலாட்ட உயர்ந்திடுவோம்
தமிழாம் தாயகம் எம்மவரை வாழ்த்திடவே.

**சு.பகிர்தினி**
A/L [2012]
கலைப் பரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011**

***சாரணியம்***

***பேடன் பவல் பிரபு தினப் போட்டி***

சி.துஷாரதன் (புதிர்போட்டி) 2ம் இடம்(மாகாணமட்டம்)
இ.கீர்த்திகன் (புதிர்ப்போட்டி) 3ம் இடம் (மாகாணமட்டம்)
*FO நிகழ்வு தாளலயம் 1ம் இடம்(மாகாணமட்டம்)

***சித்திரம்***

- பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம் ஓவியப்போட்டி
  சி.மோகனராசா -3ம் இடம்
- உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்ட பொலிஸ் படையினர் நடாத்திய சித்திரப் போட்டி
  ர.விதுசிகா - 1ம் இடம் இ.பதுசன் - 3ம்இடம்

**2010**

***சாரணியம்***

***பேடன் பவல் பிரபு தினப் போட்டி***

கு.திருரங்கன் - புதிர்போட்டி - 3ம் இடம் (மாகாணமட்டம்)

***சித்திரம்***

- டெங்கு விழிப்புணர்வு சித்திரப்போட்டி
  நா.சபேஷ்-மாவட்டமட்டம் 1ம் இடம்
- அரச சிறுவர் ஓவிய விழா
  மாவட்டமட்ட வெற்றியாளர்கள்
  நா.சபேஷ் தி.மதுசன் ந. மிதுனன்

***உலகை வெற்றி கொள்ளும் பிள்ளைகள் - சித்திரப்போட்டி (மாவட்ட மட்டம்)***

பிரிவு 1
ஜெ.றெஸ்வினி - 1ம் இடம் கி.சுதர்ஜன் - 3ம் இடம்

பிரிவு - 2
இ.லோஜிதன்-1ம் இடம் கு.துவாரகன் - 2ம் இடம்
இ.கோபிகன் - 3ம் இடம்

**2012**

***சாரணியம்***

இலங்கைச் சாரணர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடாத்திய நாட்காட்டி ஓவியப் போட்டி

தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டோர்.
1.செல்வி.அ. நவோமியா 2.செல்வி.கி.துஷாந்தி
3.செல்வன்.சி.மோகனராசா 4.செல்வன்.சி.துஷாரதன்

**புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர் - 2012**

1. செல்வன். ஜெயக்குமார் நிக்சன்
2. செல்வன். தீகரன் பிருந்தன்
3. செல்வி. தயாகரன் டிசானி
4. செல்வன். வேலாயுதம் ஜதுஷன்
5. செல்வி. டேமியன் துஷாரா
6. செல்வி. ரவீந்திரன் பிதுர்ஷனா
7. செல்வன். ஜெயந்தகுமார் அருள்பிரகாஸ்

## காகத்திடம் அறிய வேண்டிய பண்புகள்

❖ ***ஒற்றுமை***

❋ இன்றைய காலகட்டத்தில் ஒற்றுமை இல்லாததன் காரணமாகவே தற்போதைய இனவெறியுத்தம் நடைபெற்று அதில் பல ஆயிரம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதுடன் அவர்களது பூர்வீக நிலங்களும் அழிக்கப்பட்டது.

❋ காகங்கள் ஆனவை தமக்குள்ளே மிக நெருக்கமான ஒற்றுமையை கடைப்பிடிக்கின்றன.

❖ ***பகிர்ந்துண்ணல்***

❋ நாம் என்ன பொருள் பண்டங்கள் வைத்திருந்தாலும் அதையாருக்கும் கொடுக்க மறுக்கின்றோம். அது மட்டுமா வீட்டுக்கு வரும் ஏழை எளியவர் களை கூட இன்னும் சிலர் மதிப்பதில்லை உணவுப் பண்டங்களைக் கொடுப்பதும் இல்லை.

❋ ஆனால் காகங்கள் ஆனவை தமக்கு ஒரு சிறிய உணவு கிடைத்தாலும் அது காகா என்று கூட்டத்தை அழைத்தபின்பே அவ் உணவை சேர்ந்து உண்ணும் .

❖ ***கூடிவாழ்தல்***

❋ நாம் தற்போதைய காலகட்டத்திலே தனிக் குடும்பத்திலேதான் வாழ்கின்றோம். ஆனாலும் சிற்சில பிரச்சினைகளும் எழுகின்றன.

❋ காகங்கள் ஆனவை எப்போதும் ஒற்றுமையுடனே கூடி வாழ்கின்றன. எந்த பிரச்சினைகளிலும் மாட்டிக் கொள்வதில்லை.

❖ ***துக்க சம்பவத்தில் கலந்து கொள்ளல்***

❋ எம்மிடையே துக்க சம்பவத்திலே கலந்து கொள்வது குறைவாகவே உள்ளது. யார் செத்தால் நமக்கு என்ன என்று அவற்றை பின்தள்ளிப் போட்டுவிடுகின்றோம்.

❋ காகங்கள் துக்க சம்பவத்தில் கலந்து எல்லா காகங்களையும் காகா என்று அழைத்து துக்கத்தை தமக்கு இடையே பகிர்ந்து கொள்ளும்.

**அஸ்வினி,**
2013 கலைப்பிரிவு.



பேச்சுக்கலையால் அனைவரையும் ஈர்க்கும் திறன் பெற்ற சு.றொபின்ஸ் கமில்டன் பாடசாலை நிகழ்வுகள் முதல் கொண்டு தேசிய ரீதியான நிகழ்வுகள் ஈறாக அனைத்திலும் தனது திறனை வெளிப் படுத்தியவர். பெற்ற வெற்றிகள் சில.........

01. கொழும்பு இந்துக் கல்லூரியின் வைர விழாவை முன்னிட்டு தேசிய ரீதியாக நடைபெற்ற பேச்சுப் போட்டி-1ம் இடம்
02. மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியை கிருபாநிதி பவசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டி - 1ம் இடம்
03. கொக்குவில் இந்துக் கல்லூரி நூற்றாண்டுவிழா பேச்சுப் போட்டி - 1ம்இடம்
04. தமிழ்த்தினப் போட்டி மேற்பிரிவு. மாவட்டமட்டம் -1ம் இடம்
05. H.N.B நடாத்திய பேச்சுப் போட்டி மாவட்டமட்டம் -2ம் இடம்
06. தியாகிகள் அறக்கொடைநிறுவனம் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நடாத்திய பேச்சுப் போட்டி. மாவட்டமட்டம் 2ம் இடம்
07. நூலக தினப் பேச்சுப் போட்டி.வலயமட்டம்-1ம் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலைப்பந்தாட்டம்


*வலைப்பந்தாட்டம் கரப்பந்தாட்டங்களில் எமது கல்லூரி தொடர்ச்சியாக சாதனைகளை புரிந்து வருகிறது. கடுமையான போட்டிகளை எதிர்கொண்டு மாகாணம் வரை வெற்றிகளை தக்கவைத்துள்ள எமது அணி தேசிய ரீதியாகவும் சாதனைகளை நிலைநாட்டியுள்ளது.*

| பிரிவினர் | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| 15வயது | மாகாணம் *2nd* | மாகாணம் *1st* | - |
| 17வயது | மாகாணம் *2nd* | மாகாணம் *3rd* | மாகாணம் *1st* |
| 19வயது | - | மாகாணம் *2nd* | மாகாணம் *3rd* |

☆ MILO CUP – 2010- 16 வயதுப்பிரிவு தேசிய மட்டத்தில் 3ம் இடம்



15 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்ட அணி




17 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்ட அணி



19 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்ட அணி



19 வயதுப் பெண்கள் பிரிவு கரப்பந்தாட்ட அணி

## அம்மா

கர்ப்பத்தில் இருக்கும் போது
தன் கவனக் குவிப்பினால்
பட்டுப் போல் செதுக்கி செதுக்கி
தாயென்னை ஈன்றெடுத்தாள்



ஈன்றெடுத்த பின்னும் விட்டாளா
மூக்கும் வாயும் முழியும் என
எண்ணையிட்டு
அங்கங்களை
குளிர்ச்சியடையச் செய்து
காலை இளவெயிலில்
உலர விடுவாள்
களிமண் சிற்பம் போல

இவ்வாறாக என் தாயொரு சிற்பியானதால்
அவளின் கைதேர்ந்த செதுக்கலில்
நானொரு நடைசிற்பம் ஆனேன்
கால நடையில் நானே
என் வாழ்வைச் செதுக்கத் தொடங்கினேன்

வாழ்வைச் செதுக்கும் வலிமை
தாயின் பாலூட்டலில் சுரந்தது
வாழ்வின் லயம் அவளின்
தாலாட்டைத் தழுவியது

அம்மா
என் இரத்தோட்டத்தில்
இன்றுமுன் பாலூட்டம் மூலவளம்
காற்றிலுன் தாலாட்டுச் சங்கீதம்

எண்ணிறந்த காயங்கள்பட்ட
எம் தேசத்துக் காற்றில்
தாயே உன் தெள்ளிய தாலாட்டை
என்னால் தனி பிரித்துக் கேட்க முடிகிறது
என் உணர்வெளிப் பரப்பெங்கும்
தாய்மையின் நித்தியத்துவத்தை ஓதியபடி

**கா.ஜெயரூபினி**
A|L.2012
கலைப்பிரிவு.



19 வயது ஆண்கள் பிரிவு கரப்பந்தாட்ட அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அர்ப்பணிப்போடு பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றோரை நன்றியோடு நினைவில் கொள்கிறோம்*

22.02.2010 – திருமதி.றோ.பவானந்தன்
22.02.2010 – திரு.வ.துவாரகன்
02.08.2010 – திருமதி.த.காசிநாதன்
23.09.2010 – திரு.வ.ஸ்ரீகாந்தன் (அதிபர்)
30.10.2010 – திருமதி.க.குகதாஸன்.
18.02.2010 – திருமதி.சி.கஜபாலன்.
18.02.2010 – திருமதி .வ.பத்மநாதன்
18.02.2010 – திருமதி.செ.சிவநாதன்
09.05.2011 – திருமதி.க.சபாரட்ணம்
09.05.2011 – செல்வி.த.ரேவதி.
05.09.2011 – செல்வி.சி.சிவரஞ்சினி
06.10.2011 – திருமதி.ம.விக்னராஜா.
02.01.2012 – திரு.த.அருளரசன்
12.03.2012 – செல்வி.கு.விமலினி
09.05.2012 – திரு.க.ஈஸ்வரகுமரா
14.03.2011 – திரு.க.சிவசங்கர் (பகுதித்தலைவர்)
12.03.2012 – திரு.க.ஸ்ரீநந்தகோபன் (பகுதித்தலைவர்)
12.03.2012 – திரு.ந.ஹரிகரன்
14.05.2012 – செல்வி.சு.யசோதரா (ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி)



ஆசிரியர் தினவிழா 2012

துடுப்பாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரியர் அணி

## மறுபாதி கவிதைக்கான இதழ்

**- நூல் அறிமுகம் -**




கவிதை என்பது காலத்தின் பிரதிபலிப்பு. உணர்வின் வடிகால், வானத்து நட்சத்திரங்களிலிருந்து குப்பையிற் குன்றி மணி வரை தன்னுள் அடக்கி வரைவிலக்கணப்படுத்தும் தன்மை வாய்ந்தன.

கவிதைகளுக்கென்று தனியே தனித்துவமாக நூல்கள் எழுந்தமை குறைவாகவே காணப்படுகின்றன. இக் குறையை நிவர்த்தி செய்வதற்காக "மறுபாதி" என்ற கவிதைக்கான இதழ் வெளிவந்து கொண்டிருப்பதாக நான் எண்ணுகின்றேன். அந்த வகையில் மறுபாதி இதழ்-6 பற்றிய பார்வையை இங்கே பகிரலாம் என எண்ணுகிறேன்.

மறுபாதி இதழ் சித்தாந்தனை ஆசிரியராகவும் சி.ரமேஸ், அ.கேதீஸ்வரன் ஆகியோரை இணை ஆசிரியர்களாகவும் கொண்டு வெளிவருகிறது.

பத்திற்கும் மேற்பட்ட கவிதைகளையும், கவிஞர்களது உணர்வுகளை கட்டுரை வடிவிலும் விபரிப்பதாய் அமைந்துள்ளன. இவ்விதழ் படிமங்களை உள்வாங்கியவாறு பல கவிதைகள் காணப்படுகின்றன. மொழி பெயர்ப்புக் கவிதைகளின் தன்மையும் அவ்வாறே. பார்த்தவுடன் புரிந்து கொள்ளும் தன்மையை எல்லாக் கவிதைகளிலும் காணமுடியாவிட்டாலும் அவற்றின் ஊடுபொருள் மிகச் சிறப்பாய் அமைந்துள்ளது. மறுபாதி இதழின் வருகை அனைவருக்கும் மகிழ்வைத் தருவதாக அமைகின்றது.

சே. நிரோஜினி
2013 கலைப்பிரிவு

## கல்லூரிக் காவியத்தில் ஓர் ஏணி

முன்னொரு காலத்தில்
சண்டிலிப்பாய் இந்துவெனும்
தாய்மடியில் ஓர்
ஏணியிருந்தது
எம் கல்லூரி தரமுயரவும்
பல இடங்களில்
தடம் பதிக்கவும் கூட
காரணமதுவே.................
தலைகளை உள்ளிழுத்த
ஆமைகளாய் இருந்த
நாமும்
அப் பொன் ஏணியுடன்
கை கோர்த்ததும்
மெல்லத் தவழ்ந்தோம்
தாவியும் ஓடினோம்..........
மாவட்டம் மாகாணம்
தேசியம் என
உயர உயரப்
பறந்தோம்
ஆனபோதிலும்
ஒருதடவை கூட
அப்பொன் ஏணி
சறுக்கியதில்லை..........
ஆனால்
ஆடெல்லாம் கனவு
கண்டால்
அரிவாள் அறியாது
புழுவெல்லாம் கனவு கண்டால்
கொழுவுக்குப் புரியாது
எப்படியோ பிரிவானோம்
இடிவிழுந்த ஓடானோம்
ஐந்து வருஷத்தோடு
இரு வேறு
திசையானோம்..........
வேறோர் கல்லூரிக்கு
எம் பொன் ஏணி
பயணம் போக
கையிலிருந்த பணியாரத்தை
கைநழுவ விட்ட
குழந்தையாய்
வெம்பி அழுதோம்
புழுதியில் புரண்டோம்..........
வெற்றிக் களிப்பால்
மாத்திரம்
நெஞ்சம் கரைந்து
கண்கள் உடைந்து
கண்ணீர் வருவதில்லை
பிரிவுத் துயராலும்
வருமென்று
அன்றுதான்
கண்டு கொண்டோம்.........
ஆனாலும்
ஒன்று சொல்கிறோம்
இன்னோர் ஜென்மமிருந்தால்
நாம் மரமாய்ப் பிறக்க வேண்டும்
எமை உயர்த்திய
ஏணிக்கு
நிழல் கொடுக்கவாவது.........

ட. சுகன்ஜா
2013 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றூபன் பிறிண்டேர்ஸ். ஆனைக்கோட்டை.